29

03.11.2010 அன்று மாண்புமிகு நடைபெற்ற மாநில அளவிலான விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழு கூட்ட நடவடிக்கைகள்

*******

**தலைமை : மாண்புமிகு துணை முதல்வர்**

முதன்மைச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்கள் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள், நிதியமைச்சர், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் ஆகியோரையும் மற்றும் இக்குழுவின் இதர உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றார்.

2. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு இந்த கூட்டத்தில் பங்கேற்று தலைமை தாங்கியதற்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். மேலும் இத்துறை மூலம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களை எடுத்துக் கூறினார்.

3. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் முதன்மைச் செயலாளர், நாட்டிலேயே நமது மாநிலத்தில் மட்டுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் என்ற பிரிவு காவல்துறைத் தலைவர் தலைமையில் செயல்படுவதாகவும், மாநிலத்தில் 2822 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாகவும், அவ்வழக்குகளை குறைக்க 4 சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் 26 சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் 343 வழக்குகள் காவல் நிலையங்களில் நிலுவையில் உள்ளதாகவும் அதனை குறைக்க காவல் துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்குமாறு கூடுதல் காவல் துறை தலைவர் அவர்களை கேட்டுக் கொண்டார். அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஏற்படும் வன் கொடுமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு தலைமைச் செயலாளர் அறிவுறுத்தியுள்ளதாகவும், அம்மக்களையும் சமூகத்தில் சமமாக நடத்துவதற்கு இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் கூறினார்.

4. திரு. இராதாகிருஷ்ணன், இ.கா.ப, கூடுதல் காவல்துறை இயக்குநர் தனது உரையில் தமிழகத்தில் வன் கொடுமைகள் தொடர்பான வழக்குகள் நாளொன்றுக்கு 7 முதல் 10 வழக்குகள் பதிவாகின்றன. அந்த விவரங்களை 10 மணிக்குள் பெற்று 11 மணிக்குள் தினந்தோறும் அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அது குறித்த மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் பெரிய அளவிலான அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் 2010 வரை 1050 வழக்குகள் பதிவாகி உள்ளது, அதில் 22 கொலை, 24 கற்பழிப்பு, 10 தீ வைப்பு, மற்றவைகள் 994 வழக்குகளாகும். மற்ற மாநிலங்களை காட்டிலும் இங்கு குறைவாக வழக்குகள் உள்ளன. மொத்தமாக 2822 வழக்குகள்

30



நிலுவையில் உள்ளன. காவல் விசாரணையில் அதிகபட்சமாக திருச்சி, விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை மாவட்டங்களில் அதிகமாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருப்பூர், கடலூர், ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற கொலை, கற்பழிப்பு வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்களுக்கான தேசிய ஆணையம், தமிழகத்தை ஆய்வு செய்தபோது தமிழகத்தில் மற்ற மாநிலங்களை காட்டிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் குறைவாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

தண்டனை விகிதாசாரம் 2007ம் ஆண்டில் 13 சதவீதமாகவும், 2008ம் ஆண்டில் 11 சதவீதமாகவும் உள்ளது. உத்திரபிரதேசம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் தண்டனை விகிதம் அதிகமாக உள்ளது. 90% வழக்குகள் சாதி பெயரை கூறி திட்டுவதால் பதியப்படும் வழக்குகள் ஆகும். இம்மாதிரியான வழக்குகளில் சமாதனம் ஏற்பட்டுவிடுவதால் பெரும்பான்மையான வழக்குகள் விடுதலையில் முடிகின்றன. கொலை, தீ வைப்பு, கற்பழிப்பு போன்ற வழக்குகளில் 99% தண்டனைகளில் முடிகின்றன. விழுப்புரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க கருத்துரு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக வெள்ளக்கோவில் திரௌபதி அம்மன் கோவிலில் கவுண்டர் இன மக்கள் ஆதி திராவிடர் மக்கள் வழிபட்ட காரணத்திற்காக தனியாக கோவில் அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆதி திராவிடர் மக்கள் அக்கோயிலிலும் நுழைய அனுமதி கோரி வருகின்றனர். இப்பிரச்சினையும் விரைவில் சுமூகமாக தீர்த்து வைக்கப்படும் என்று தெரிவித்தார்.

5. திருமதி. எஸ். மாலதி, இ.ஆ.ப., தலைமைச் செயலாளர் தனது உரையில் தமிழகத்தில் வன்கொடுமை தடுப்புச்சட்டம், குடிமையியல் சட்டமும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலும் 75 சதவீத வழக்குகள் சாதி பெயரை கூறி திட்டுவதால் பதியப்படுவதாக உள்ளது. கொலை மற்றும் கற்பழிப்பு வழக்கு குறைவாக உள்ளது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை தலைமைச் செயலாளர் இந்த வழக்குகளை சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டத்தில் ஆய்வு செய்வதாகவும், தமிழகத்தில் தண்டனை விகிதாசாரம் 11-13 % வரை உள்ளது என்பதும் ஓரளவிற்கு திருப்தி அடையும் நிலையில் உள்ளது. இச்சட்டத்தை பொறுத்தவரை ஒருமுறை வழக்கு பதிவு செய்யப்பட்டுவிட்டால் காவல் துறை தலைவர் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தீவிரமாக விசாரிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில வழக்குகளில் சமாதானமும் செய்து வைக்கப்படுகிறது. அமைதிக் குழு (Peace Committee) அமைக்க முயற்சிப்பதால் தமிழகத்தில் வன்கொடுமையை குறைக்கலாம் என கூறி அனைத்து சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இது குறித்த அவர்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

6. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955 மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சட்டம் பயன்படுத்துவதற்கு இலகுவாக இல்லாததால் இச்சட்டம் மூலமாக போதுமான அளவில் பயன் பெற முடியவில்லை. 03.08.2006ல் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் உருவாக்கப்பட்டது. வன்கொடுமை தடுப்புச் சட்டம் மிக கடுமையாக உள்ளதால் குற்றங்கள் குறைந்துள்ளது. ஆதி திராவிடர் மக்களுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். தண்டனை, விடுவிப்பு, மறுவாழ்வு போன்றவற்றை நாம் ஆய்வு செய்ய இக்கூட்டம் பயனுள்ள வகையில் இருக்கும் என கூறினார். மேலும் இக்குழு அதற்குரிய காலக்கட்டத்தில் கூடி பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை செய்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மாநில அளவிலும் விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கூட்டி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

7. பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. மகேந்திரன் தனது உரையில் இதுவரையில் இந்த மாதிரி கூட்டம் நடைபெற்றதில்லை என்றும், இக்கூட்டம் ஏற்பாடு செய்தமைக்கு துணை முதல்வர் அவர்களுக்கு தனது நன்றியை தெரிவித்தார். வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டனைகள் குறைவாகவே கொடுக்கப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ் தண்டனைகள் தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

துணை காவல் கண்காணிப்பாளர்கள் மட்டுமே இச்சட்டத்தின் கீழ், விசாரணை செய்ய தகுதியுடையவர்கள். ஆய்வாளருக்கு இந்த பணியினை தரக்கூடாது என்று குறிப்பிட்டதற்கு கூடுதல் காவல் துறை இயக்குநர் இது குறித்து, துணை காவல் கண்காணிப்பாளர் மட்டுமே இப்பணியினை செய்வதாகவும், ஆய்வாளர்கள் உதவி செய்வதாகவும் தெளிவுபடுத்தினார்.

அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு நீதிமன்றங்கள் கூடுதலாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் அதிக எண்ணிக்கையில் வசித்து வருகின்றனர், அம்மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 2 கூட்டம் மட்டுமே கூட்டப்பட்டுள்ளது. கூடுதலாக கூட்டம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்படிபட்ட சட்டங்கள் இருப்பது உண்மையிலேயே பெரும்பாலான ஆதி திராவிட மக்களுக்கு தெரிய வருவதில்லை. ஆதி திராவிடர் தேசிய ஆணையம் மாநில அளவில் ஆய்வு செய்வது போல மாவட்ட அளவிலும் ஆய்வு செய்தால் கூடுதலாக நன்மை கிடைக்கும். பல்வேறு திட்டங்கள் மாநில அளவில் செயல்படுத்தப்படுகிறது. இந்தியாவிலேயே இம்மக்களுக்காக 19.14% நிதி ஒதுக்கி இருப்பது நமது மாநிலம்தான். இம்மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி அவர்களுக்காக செலவிடப்படுகிறதா என்பதை எவ்வழியில் அறிந்து கொள்ளலாம் என

32



வினவினார். அதற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறை அமைச்சர் 2005ல் கடந்த ஆட்சியில் 567 கோடி வகுக்கப்படாத திட்டங்களில் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது 19 கோடி நேரடி திட்டத்தில் ஒதுக்கி உள்ளோம். இத்தொகை முழுமையும் ஆதி திராவிடர் மக்களுக்கு தான் செலவிடப்படுகிறது. நபார்டு மூலம் 110 கோடி ரூபாய் பெற்று 243 கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அனைத்தும் பதிவு செய்து முழுவதுமாக பயன்படுத்த வேண்டும். அதை கண்காணிப்பு குழு ஆய்வு செய்ய வேண்டும்.

அதற்கு நிதித்துறை செயலாளர் உட்கூறு திட்ட தலைப்பின் கீழ் ஆதி திராவிட மக்களுக்கு மட்டும் தான் நிதி கொடுக்கப்பட்டு வருகிறது. அது பற்றிய புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட துறையில் தான் உள்ளது என்று பதிலளித்தார்.

நிதியமைச்சர், பொது நிதியிலிருந்து 25% ஆதிதிராவிட மக்களுக்காக தான் செலவிடப்பட்டு வருகிறது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, அமைச்சர் அளவில் ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர்கள் பஞ்சமி நிலத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

8. போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. வரதன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் என்ற அடிப்படையில் இருப்பதால் பணிச்சுமை அதிகமாக உள்ளதால் வழக்குகள் பதியப்படுவதில் தாமதம் ஏற்படுகிறது. தீருதவி (Compensation) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் உடனடியாக கொடுப்பதால் வழக்கு திரும்ப பெறப்படுகிறது. ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வசதியினை உயர்த்துவதற்கு பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உதாரணமாக ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படும் கலைஞர் வீட்டு வசதி திட்டம் ஆகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு கிணறுகள் வெட்டி கொடுக்க வேண்டும். கோயில் நுழைவு விவகாரத்தை நிர்வாகம் முறையாக கையாள வேண்டும். வேலை வாய்ப்பினை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு உருவாக்கித்தர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் விகிதாசாரப்படிதான் வீடுகள் கட்டி தரப்படுகிறது என்று உள்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் கூறினார்.

மேலும் திரு. வரதன் அவர்கள் 12618 பஞ்சாயத்துக்களில் 34854 காலணிகள் உள்ளதாகவும் அதில் பல தாலுக்காக்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லை என்றும் சுடுகாட்டு பாதை இல்லாமல் இருப்பது, குடிநீர்வசதியின்மை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன என்று தெரிவித்தார். எனவே சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் நிதிகளிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து குளம் வெட்டி தரவேண்டும். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மாணவர் விடுதிகளில்

பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்குவது இல்லை. அதே போல் பிற்படுத்தப்பட்ட மாணவருக்கான விடுதிகளில் தங்கும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் சமமாக நடத்தப்படுவது இல்லை. படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கிடைப்பதிலும் தாமதம் நிலவுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

9. சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் தற்போது அரசு எடுக்கும் பல முயற்சிகளினாலும், கிராமங்கள் வரை கல்வியறிவு எட்டியுள்ளதால் இனக்கலவரங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆதி திராவிடர் மற்றம் பழங்குடியின மாணவர்களுக்கான விடுதிகளில் வழங்கப்படும் உணவுகளின் தரம் தற்போது நன்றாக உள்ளது. மேலும் அம்மாணவர்களுக்கு காலையில் தேநீர் மற்றும் மாலையில் தேநீர் போன்றவற்றை செய்து தரவேண்டும். இரவு வேளைகளிலும் சிற்றுண்டி தரப்படுகிறது. முதியோா் ஓய்வூதியம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும், வங்கிகள் மூலம் கடன் உதவி கிடைப்பது சிரமமாக உள்ளது. எனவே, மாவட்ட அளவில் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இக்கூட்டங்கள் முறையே கூட்டப்பட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு கடன் உதவி விரைவில் கிடைக்க வழி செய்யவேண்டும். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவரும் சட்டப்படி மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் முறையே ஆண்டிற்கு 4 முறைகூட்ட வேண்டும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தர போதுமான நிதி ஒதுக்க வேண்டும். அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வசிக்கும் இடத்தில் தண்ணீர் வசதி செய்து தர வேண்டும். ஆதி திராவிடர் மாணவர்களுக்கு மற்ற பள்ளி மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது போல் இருக்கை வசதிகள், Bench, Desk அமைத்துத்தர வேண்டும். ஆதி திராவிடர் மாணவர்களுக்கு கல்லூரி அமைத்து தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையேற்ற பிறகு வால்பாறையில் தான் முதன்முதலில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கான கல்லூரி அமைக்கப்பட்டது. மேலும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கூடுதலாக கழிப்பிட வசதி செய்து தர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

10. நன்னிலம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. பி. பத்மாவதி அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால்தான் குற்றங்கள் அதிகமாக நடக்கிறது. கூடுதலாக நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டால்தான் குற்றங்கள் குறையும். மற்ற பகுதிகளில் உள்ளது போன்ற மின்சார வசதி, தண்ணீர் வசதி, இடுகாடு, இடுகாட்டுப் பாதை இம்மக்களுக்கு கிடைப்பது இல்லை. உட்கூறு திட்டத்தின் (SCSP) வாயிலாக கிடைக்கின்ற நிதி ஆதி திராவிட நலத்துறை மூலமாக கிடைக்க வேண்டும். கலப்பு திருமணங்கள் செய்து கொள்பவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தி தர வேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டும். தாட்கோ மூலம் அரசு வழங்கும்

34



கடனுதவிகளை பல வங்கிகள் சிறப்பாக செயல்படுத்துவதில் உள்ள சிரமங்களை அரசு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

11. திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மூர்த்தி அவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு சமுதாயம் கூடம் கட்டித் தரவேண்டும். ஆதி திராவிட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குவது இல்லை. முதியோர்களுக்கான உதவித் தொகை அவர்களுக்கு வாரிசுகள் இருப்பதால் கிடைப்பது இல்லை. எனவே, வாரிசுகளால் நிராகரிக்கப்பட்டுள்ளவர்களுக்கு முதியோர் ஒய்வூதியம் கிடைக்க வழி செய்ய வேண்டும். முன்பு ஆதி திராவிட ஒப்பந்ததாரர்களுக்கு முன் வைப்புத் தொகை கிடையாது. இப்போது 2% கட்ட வேண்டும் என கோருகிறார்கள். இதனை நீக்க வழிவகை செய்யவேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ள விவரம் தெரிந்து கொள்ள விரும்பினார். கல்வி உதவித் தொகை அனைத்து ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு உள்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் முதியோர்களுக்கு வாரிசுகள் இருந்தாலும் ஆதரவற்று இருந்தால் அவர்களுக்கு ஒய்வூதியம் கிடைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

12. திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. உலகநாதன் அவர்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளவர்களை துணை காவல் கண்காணிப்பாளர் அளவில் உள்ள அதிகாரி மட்டுமே விசாரிக்க வேண்டும். மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நடத்துவதற்கு, உறுப்பினர்களுக்கு தகவல் கடிதம் அனுப்பும் போது தாமதமாக அனுப்புவதை தவிர்த்து முன்னரே தெரிவிக்கும்படி செய்ய வேண்டும். அரசு திட்டங்களான இந்திரா அவாஸ் யோஜனா, கலைஞர் வீட்டு வசதி திட்டம், சமத்துவபுரம் ஆகியவற்றை பாராட்டினார். தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளவற்றில் பழுது ஏற்பட்டுள்ளது, அதனை சரிசெய்து தரவேண்டும். வங்கி மூலம் அல்லாமல் தாட்கோ மூலமே ஆதி திராவிட மக்களுக்கு கடன் வழங்க வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

13. அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. சங்கரவல்லி (எ) சங்கரி நாராயணன் அவர்கள், குடிமையியல் உரிமை வழக்குகள் அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதில்லை, காவல் துறை இந்த வழக்குகளை பதிவு செய்வதில்லை என்றும், ஆகவே காவல்துறைக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட அளவிலான கூட்டங்களை ஆண்டிற்கு 4 முறை சரியாக நடத்துவதில்லை என்றும், அப்படியே நடந்தாலும் முன்னறிவிப்பு போதிய கால அவகாசத்தில் தெரிவிப்பதில்லை என்றும் தெரிவித்தார். கூட்ட நடவடிக்கை குறிப்புகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுவதில்லை. மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு கூட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொள்வதில்லை. வன்கொடுமை வழக்குகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து அனைத்து காவல் துறை அதிகாரிகளுக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். ஆதி திராவிடர் மற்றும்

35



பழங்குடியினர் மக்களுக்கு வீடுகள் கட்டி கொடுக்கும் போது கழிப்பறை வசதியும் கட்டித்தர வேண்டும் என்று குறிப்பிட்டார்.

14. குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சௌந்தர பாண்டியன் அவர்கள் அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

15. அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். குருசாமி தனது உரையில் தாட்கோ மூலம் வங்கிகளில் கடன் அளிப்பதில் security கேட்கின்றனர். ஆதி திராவிட மக்களுக்கு கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு கிடைத்தால் இம்மாதிரியான பிரச்சினைகள் தானாக குறைந்து விடும். நகரங்களில் கோயில்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை அனுமதிப்பது போல் கிராமங்களில் அனுமதிப்பதில்லை என்று குறிப்பிட்டார்.

16. அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் பள்ளி, கல்லூரிகளில் கழிப்பிட வசதிகளை நன்றாக பராமரித்து தரவேண்டும். ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களில் நில உரிமையாளர்களே ஆக்கிரமிப்பு செய்து கொண்டு அம்மக்களிடம் ஒப்படைக்க மறுக்கின்றனர். அரக்கோணத்தில், கீளந்தூர் கிராமத்தில் பட்டாக்கள் ஆதி திராவிடர் மக்களுக்கு கொடுத்துவிட்டு நிலம் இதுவரையில் ஒப்படைக்கவில்லை. இப்பிரச்சனையை தீர்க்க வேண்டும். பஞ்சமி நிலங்களை ஆதி திராவிட மக்களுக்கு கூட வழங்கலாம். காவல் துறையினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குகள் பதிவு செய்வது இல்லை என்று குறிப்பிட்டார்.

17. நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.கெ.எஸ். விஜயன் அவர்கள் 1974–1975ல் கட்டப்பட்டுள்ள கான்கிரிட் வீடுகள் பழுதடைந்து உள்ளது. அவற்றை பழுது நீக்கித் தரவேண்டும். அனைத்து தரப்பு மக்களும் அர்ச்சகர்களாகலாம் என்பது பாராட்டுக்குரியது. நிலம் வழங்கும் போது பஞ்சமி நிலங்களை கூட வழங்கலாம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின் கீழுள்ள குற்றங்களுக்கான தண்டனை விவரங்களை முக்கியமான செய்தித் தாள்கள் மூலமாக வெளியிட்டால் குற்றங்கள் குறைய வாய்ப்பு உள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சட்டத்தின்கீழ் அரசு எடுக்கும் பல முயற்சிகளை பாராட்டினார்.

18. நிதியமைச்சர் அவர்கள் தனது உரையில் வன் கொடுமைகளை தடுப்பதற்கான பொறுப்பு காவல்துறை அதிகாரிகளிடம் உள்ளது. கோயில் வழிபாடு செய்ய தடை குறித்து சுமுகமாக நடவடிக்கை எடுக்கப்படும். கிராமங்களுக்கு கிடைக்கும் பொது வருமானம், தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக உரிய வகையில் பங்கீடு செய்யப்படும். நிலங்களை பிரித்து கொடுப்பதில் மாவட்ட ஆட்சியர்கள் ஆணையிட்டால் தான் காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு சட்டத்தை நல்ல வகையில் பயன்படுத்துவதைவிட அதனை தவறாக பயன்படுத்துவதினால் மூன்று மடங்கு தீமை ஏற்படும்.

36



வன்கொடுமைகளை குறைக்க உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்று கூறி நன்றி தெரிவித்தார்.

19. துணை முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் உறுப்பினர்கள் விவாதித்த கருத்துக்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். மாவட்ட அளவில் நடைபெறுவது இல்லை. இதற்கான நடவடிக்கைகளை தலைமைச் செயலாளர் மேற்கொள்ள வேண்டும். மாநில அளவில் நடைபெறாமல் இருந்த இக்கூட்டம் உரிய காலத்தில் இனி நடைபெறும் என்றும் மாவட்ட அளவிலும் இக்கூட்டத்தினை நடத்த வேண்டும் என்பதை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு கருத்துகளை எடுத்து உரைத்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுடைய கோரிக்கைகளை அனைத்து சம்மந்தப்பட்ட துறைகளும் உடனுக்குடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு இவ்விரு சட்டங்களின்கீழ் உள்ள சலுகைகளையும் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கவும், வழக்குகளை இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்ய காவல்துறையினை கேட்டுக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

20. தலைமைச் செயலாளர் அவர்கள் தனது உரையில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும் சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டத்தில், இந்த வழக்குகள் குறித்த நிலுவையும் ஆய்வு செய்யப்படும். நிலுவையில் உள்ள வழக்குகளில் பல வழக்குகள் பிற இனத்தவர், ஆதி திராவிடர்களை, ஆதி திராவிடர் என்று அழைப்பதால் பதிவு செய்யப்படுகின்றன. கொலை, கற்பழிப்பு வழக்குகள் தற்போது பெருமளவில் குறைந்துள்ளது. தண்டனை விகிதாச்சாரத்தை அதிகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தை முறையாக அதற்குரிய காலங்களில் நடத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து துணை காவல் கண்காணிப்பாளர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உத்தரவிட வேண்டும்.

21. திரு. சஞ்சய் மாத்தூர், இ.கா.ப., அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

கூட்டம் முடிந்தது.

விஷ்வநாத் ஷெகாவ்கர்.
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

37



03.11.2010 அன்று நடைபெற்ற மாநில அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் விவரம்

| வ.எண் | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. மு.க. ஸ்டாலின்<br>மாண்புமிகு துணை முதலமைச்சர் | தலைவர் |
| 2. | பேராசிரியர் திரு. க. அன்பழகன்<br>நிதியமைச்சர் | உறுப்பினர் |
| 3. | திருமதி. அ. தமிழரசி,<br>ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் | உறுப்பினர் |
| 4. | திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., | தலைமைச் செயலாளர் |
| 5. | திரு. விஷ்வநாத் ஷெகாவ்கர், இ,ஆ.ப.,<br>முதன்மைச் செயலாளர்,<br>ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலம் | அமைப்பாளர் |
| 6. | திரு. கு. ஞானதேசிகன், இ,ஆ.ப.,<br>உள்துறை முதன்மைச் செயலாளர் | உறுப்பினர் |
| 7. | திரு. பி. சிவசங்கரன், இ.ஆ.ப.,<br>ஆணையர், ஆதி திராவிடர் நலம் | உறுப்பினர் |
| 8. | திரு. உ. ரவீந்திரன், இ.வ.ப.,<br>பழங்குடியினர் நலம் | உறுப்பினர் |
| 9. | திரு. இ. தசரதன்,<br>இயக்குநர், ஆதி திராவிடர் தேசிய ஆணையம்,<br>சென்னை | உறுப்பினர் |
| 10. | திரு. இராதாகிருஷ்ணன், இ.கா.வ.,<br>கூடுதல் காவல் துறை இயக்குநர்<br>(சட்டம் (ம) ஒழுங்கு) | காவல் துறை இயக்குநரின் பிரதிநிதி |
| 11. | திரு. ஏ.கே.எஸ்.விஜயன்,<br>மக்களவை உறுப்பினர் | உறுப்பினர் |
| 12. | திருமதி சங்கரவல்லி (எ)<br>சங்கரி நாராயணன் | உறுப்பினர் |
| 13. | திரு. அ.சௌந்தரபாண்டியன் | உறுப்பினர் |
| 14. | திரு.எஸ்.குருசாமி | உறுப்பினர் |
| 15. | திரு. போளூர் ம. வரதன் | உறுப்பினர் |
| 16. | திரு.கோவை தங்கம் | உறுப்பினர் |
| 17. | திரு.டி.மூர்த்தி | உறுப்பினர் |
| 18. | திரு.கே.மகேந்திரன் | உறுப்பினர் |
| 19. | திரு.கே.உலகநாதன் | உறுப்பினர் |
| 20. | திருமதி பி.பத்மாவதி | உறுப்பினர் |
| 21. | திரு.பூவை ஜெகன் மூர்த்தி | உறுப்பினர் |
| 22. | திரு. சஞ்சய் மாத்தூர், இ.கா.வ.,<br>துணை காவல் துறை<br>கண்காணிப்பாளர், | சிறப்பு அழைப்பாளர் |
| 23. | திரு. சண்முகம், இ,ஆ.ப.,<br>முதன்மைச் செயலளர் (நிதித்துறை) | சிறப்பு அழைப்பாளர் |

3/11/2